**15 மேருவைச்செண்டால்அடித்தபடலம்**

சோமவார விரத பலத்தால் உக்ரபாண்டியனின் மனைவி காந்திமதி வீரபாண்டியன் என்ற மகனைப் பெற்றாள்.

மீண்டும் நாட்டில மழைவளம் குறைந்து, உயிர்கள் உண்ண உணவின்றித் தவித்தன. சோதிடர்களும் கிரகங்கள் அனைத்தும் சூரியனை நோக்கி நிற்பதால் ஒராண்டிற்கு இந்நிலைமை நீடிக்கும் என்றனர்.

அன்றிரவே சோமசுந்தர கடவுள் உக்ரபாண்டியனின் கனவில் சித்தராகத் தோன்றி, தற்பொழு நிச்சயம் மழை பெய்யாது எனவும், அதனை எண்ணி வருந்தாமல், மேரு மலை அதன் பக்கத்தில் உள்ள குகையில் அளவற்ற செல்வத்தை சேமித்துவைத்துள்ளதாக கூறினார். அதனால் செருக்குக்கொண்டிருக்கும் மேருவை, செண்டால் அடித்து, அந்த பொன்னை வேண்டு மளவு எடுத்துக் கொண்டு அவனது அடையாளத்தை பொறித்து வருமாறுகூறினார்.

அதன் படி உக்ரமன் பல நாடுகளை எல்லாம் கடந்து காசியில் கங்கையில் நீராடி, விசுவநாதர் பெருமானை வணங்கி, மேருவை அடைந்தான். பின்னர் மேருவை வலம் வந்து உடனே தன்முன் வரும்படி அழைத்தான். மேரு காலம் தாழ்த்தியது. கோபம் கொண்ட மன்னன் அதன செண்டாலடித்தான். மேருமலை துடித்து. அருகிலுள்ள மலைகளெல்லாம் நடுங்கின. உடனே மேருவானது எட்டுதோள்களுடனும், நான்குதலைகளுடனும், வெண்குடையுடன் பாண்டியன் முன் தோன்றியது. மேரு மலையானது தான் ஒரு பெண்ணின் மயக்கத்தால், அம்மையப்பனை தினமும் வணங்குவதை மறந்ததால் தான், இந்நிலையை அடைந்ததாகக் வருத்தத்துடன் கூறி, இதற்கு கைமாறாக அங்கிருக்கும் அளவற்ற பொன்னை அளித்தான். சித்தர் கனவில் கூறியபடி பொன்னை வேண்டுமளவு எடுத்துக்கொண்டு, அங்கு தன் அடையாளத்தை குறியிட்டு தன் நாடு வந்தான் பாண்டியன்.

மதுரை வந்த பாண்டியன் பொன்னை மக்களுக்கெல்லாம் வாரிவாரி வழங்கி அவர்களின் கஷ்டங்களை நீக்கி சுகமாய் வாழ்ந்து வந்தான். சிறிது காலம் சென்ற பின் மழை பெய்து நாடும் மீண்டும் பழைய நிலைமைக்கு வந்தது.

உக்கிரபாண்டியன் தன் மகன் வீரபாண்டியனுக்கு முடி சூடினான்.

**பல்லவி**

சோமவார விரத பலத்தால் சுந்தரி காந்திமதியும்
சயந்தனன் என்னும் வீரபாண்டியனைப் பெற்றாள்

**அனுபல்லவி**

கோமகன் கனவில் மேருவைச் செண்டால் அடித்து
கோரின பொன்னைக் கொண்டு வறுமை நீங்கிடச் சொன்னாய்

**சரணம்**

பொன்னைக் கொண்டு உக்ரன் மண்ணுயிரையெல்லாம்
தன்னுயிர் போல் காத்து ஆட்சி புரிந்தான்
தன் மகன் வீரபாண்டியனுக்கு முடி சூட்டி
உன்னடியடைந்து உய்ந்திடச் செய்தாய்